**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி.**

**அ.வ.எண்.54/2024**

**<u>தேதி : 30.06.2025</u>**

**<u>(வா.சா.1) – திரு . சிவபாலாஜி</u>**

**<u>சாட்சி அழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

**<u>குறுக்கு விசாரணை :– (பிரதிவாதி தரப்பில்)</u>**

1. என் தகப்பனார் பெயர் முருகசாமி. எனது சொந்த ஊர் பாறைப்பட்டி. என் தகப்பனார் முருகசாமி விவசாயம் செய்து வந்தார். வீடு கட்டி வாடகைக்கு விட்டுள்ளார். என் தகப்பனார்முருகசாமி பைனான்ஸ் தொழில் செய்து வந்ததாகச் சொன்னால் சரியல்ல. நானும் பைனான்ஸ் தொழில் செய்வதாகச் சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் செய்து வந்த பைனான்ஸ் தொழில் பிரதிவாதி வரவு செலவு செய்து வந்ததாகச் சொன்னால் சரியல்ல. பிரதிவாதிக்கும் எனக்கும் எப்போதும் வரவு செலவு இருந்தது கிடையாது என்றால் முன்பு பிரதிவாதி என்னிடம் எந்த வரவு செலவும் செய்தது இல்லை, தாவா கடன் மட்டும்தான் வாங்கியுள்ளார்.

2. பிரதிவாதி என்னிடம் ரூ.4,20,000/– கடனாக பெற்றுக்கொண்டதாக சொல்வதும், 05.08.2021 அன்று கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்ததாகச் சொல்வதும் தவறு என்றால் சரியல்ல. பிரதிவாதி கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டை உற்பத்தி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. தாவா கடனுறுதிச் சீட்டுக்கு பிரதிவாதி அசலும் வட்டியும் திருப்பிச் செலுத்தவில்லை என்று சொல்வதும், நான் பிரதிவாதியிடம் தாவாத்தொகையை திரும்ப செலுத்துமாறு கூறுவதும் பொய் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் எவ்வித சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எப்போது என்னிடம் கடன் கேட்டார் என்றால் ஆகஸ்ட் மாதம் 2021ம் வருடம் 1ம் தேதி வாக்கில் கேட்டார்.

3. பிரதிவாதி மணிமேகலை ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தார் என்றால் இருந்ததாகச் சொன்னார்கள், எனக்கு தெரியாது. அச்சமயம் எனது தகப்பனார் முருகசாமி மக்கள் நலப்பணியாளராக அரசால் நியமிக்கப்பட்டு பணியாற்றியதாகச் சொன்னால் எனக்கு தெரியாது. நானும் என் தகப்பனாரும் ஒரே வீட்டில் குடியிருக்கிறோம் என்றால் சரிதான். மேற்படி விபரம் எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி என் தகப்பனாருடன் பழக்கம் ஏற்பட்டு பல வருடங்களாக வரவு செலவு செய்து வருவதாகச் சொன்னால் சரியல்ல. வரவு செலவு நடந்தபோது நம்பிக்கையின் அடிப்படையில் என் தகப்பனாரிடம் பிரதிவாதி கடனுறுதிச் சீட்டு மற்றும் காசோலைகளை கொடுத்து வைத்திருந்ததாகச் சொன்னால் சரியல்ல.

4. பிரதிவாதியின் சொத்துக்களைப் பொறுத்து எதிரிடை கிரையம் என் தகப்பனாருக்கு எழுதிக்கொடுத்திருப்பதாகச் சொன்னால் எனக்கு தெரியவில்லை. பணத்தை திருப்பிக் கொடுத்தபின்னர் எதிரிடை கிரையத்தை என் தகப்பனார் ரத்து செய்து கொடுத்ததாகச் சொன்னால் எனக்கு தெரியாது. எனக்கு அந்த விபரம் நன்கு தெரியும் என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் அண்ணன் மகன் பாஸ்கரராஜா என்பவருக்கு என் தகப்பனார் ரூ.2,00,000/- கடன் கொடுத்ததாகச் சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அதற்கு ஆதரவாக பாஸ்கரராஜா என் தகப்பனாருக்கு எதிரிடை கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றும், அந்த கடனை திருப்பிக் கொடுத்தவுடன் எதிரிடை கிரையம் ரத்தாகிவிட்டது என்றும் சொன்னால் எனக்கு தெரியாது.

5. அந்த வரவு செலவு முடியும்போது ரூ.40,000/-க்கு தாமோதரனிடமும், மணிமேகலையிடமும் ரூ.20,000/-க்கு இரண்டு கடனுறுதிச் சீட்டுக்களை என் தகப்பனார் பெற்றுக்கொண்டதாக சொன்னால் சரியல்ல. மேற்படி கடனுறுதிச் சீட்டுக்களில் ரூ.20000 என தொகை எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கடனுறுதிச் சீட்டு நிரப்பப்படாமல் உள்ளது என்றால் சரியல்ல, என் தகப்பனார்

வட்டித்தொழிலே செய்யவில்லை. என் தகப்பனார் சிவில் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்களில் பண வசூல் வழக்குகள் தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் எனக்கு தெரியாது. கடனுறுதிச் சீட்டில் ரூ.20,000/− என தாமோதரன் தொகையை எழுதிதாகச் சொன்னால் எனக்கு தெரியாது. அந்த ரூ.20,000/−த்தை திருப்பிக்கொடுத்து தாமோதரன் கடனுறுதிச் சீட்டை திரும்பப் பெற்றுக்கொண்டதாகச் சொன்னால் எனக்கு தெரியாது.

6. மற்றும் இரண்டாவதாக ரூ.20,000/− என எழுதப்பட்ட கடனுறுதிச் சீட்டு எங்களிடம் இருந்ததாகச் சொன்னால் சரியல்ல. அந்த கடனுறுதிச் சீட்டை ரூ.20,000/− என்பதற்கு முன்பாக 4 என்ற எண்ணைச் சேர்த்து ரூ.4,20,000/−க்கு வழக்கு தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 கடனுறுதிச் சீட்டில் ரூ.20,000 என்பது ஒரு கையெழுத்தால் எழுதப்பட்டுள்ள நிலையில், அதற்கு முன் 4 என்பது எங்களால் சேர்க்கப்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகச் சொன்னால் சரியல்ல, என் முன்பாகத்தான் கடனுறுதிச் சீட்டு எழுதப்பட்டது. கடனுறுதிச் சீட்டு என் முன்பாக எழுதிக்கொடுக்கப்படவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

7. என்னிடம் காட்டப்படும் கடனறுதிச் சீட்டில் மேலே எழுதப்பட்டுள்ள ரூ.4,20,000/−க்கும், நடுவில் எழுதப்பட்டுள்ள ரூ.4,20,000/−க்கும் வேறுபாடு இருப்பதாகச் சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தரப்பை சேர்ந்தவர்தான் கடனுறுதிச் சீட்டை நிரப்பியுள்ளார். அவ்வாறு சொல்வது பொய் என்றால் சரியல்ல. கடனுறுதிச் சீட்டை யார் எழுதினார்கள் என்றால் பிரதிவாதி அழைத்து வந்த லோகநாதன் என்பவர்தான் எழுதினார். சாட்சி கையொப்பம் செய்தது யார் என்றால், அதில் ஒரு சாட்சியாக என் தகப்பனாரும், மற்றொரு சாட்சியாக பிரதிவாதி அழைத்து வந்த நாட்ராயன் என்பவரும் கையொப்பம் செய்தார்கள். நாட்ராயன் என்பவரை பிரதிவாதி அழைத்துவந்ததாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. லோகநாதன் என்பவரை பிரதிவாதி அழைத்து வந்ததகாச் சொல்வது தவறு என்றால் சரியல்ல.

8. லோகநாதன் என்பவரை பிரதிவாதிக்கு யார் என்றே தெரியாது என்றால் சரியல்ல, பிரதிவாதிதான் அழைத்து வந்தார். லோகநாதன் முகவரி என்ன என்று

கேட்டால், தாராபுரம் என குறிப்பிடப்பட்டிருந்தது. முழு முகவரி எனக்கு தெரியாது. நாட்ராயன் என்பவரின் முகவரி தெரியுமா என்றால் தெரியாது. நாட்ராயன் என்பவரும், லோகநாதன் என்பவரும் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு ரூ.20,000/–க்கு எழுதிக்கொடுக்கப்பட்ட கடனறுதிச் சீட்டை என்னிடம் கொடுத்து, அவரது தூண்டுதலின்பேரில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. வழக்கறிஞர் அறிவிப்பை பார்த்து அதிர்ச்சியடைந்தபிரதிவாதி சம்பந்தப்பட்டவர்களிடம் பேசினார் என்றும், அவர்கள் பைசல் பேசிக்கொள்ளலாம் என்று சொன்னதால் அவர் பதிலறிவிப்பு அனுப்பவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

9. பிராதில் பிரதிவாதி தொகை செலுத்ததாதால் வழக்கு தாக்கல் செய்துள்ளதாகக் கூறியுள்ளது பொய் என்றால் சரியல்ல. 1வது சாட்சியிடம் கையொப்பம் மட்டும் வாங்கியுள்ளோம் என்றும் மற்ற விபரங்கள் எதுவும் சாட்சிக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1–ஐ லோகநாதனை என்பவரை வைத்து நான் உற்பத்தி செய்துள்ளதாகச் சொன்னால் சரியல்ல. நான் வங்கியில் வரவு செலவு வைத்துள்ளேன். பாங்க் ஆப் பரோடா வங்கியில் தொழில் நிமித்தம் கடன் வாங்கியுள்ளேன். வேறு வங்கிகளில் நான் எவ்வித கடனும் வாங்கியது இல்லை. ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் சேமிப்புக் கணக்கு உள்ளது.

10. பிரதிவாதி என்னிடம் எப்போது கடன் கேட்டார் என்றால் மதிய நேரமாக இருக்கும், எனக்கு ஞாபகமில்லை. பிரதிவாதி கடன் கேட்ட அன்றே கொடுத்துவிட்டேனா என்றால், 4,5 நாட்கள் தள்ளி கடன் கொடுத்தேன். நான் பணத்தை பிரதிவாதியின் வீட்டுக்கு கொண்டுசென்றுகொடுத்தேனா என்றால் பிரதிவாதிதான் என் வீட்டுக்கு வந்து பணம் வாங்கினார். நான் சொல்வதுபோல் பிரதிவாதி என்னுடைய வீட்டுக்கு வந்து பணம் எதுவும் வாங்கவில்லை என்றும், நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1–ஐ எழுதியது ஒரே நபரா என்றால், பிரதிவாதி அழைத்து வந்த லோகநாதன்தான் எழுதினார். லோகநாதன் என்பவரை பிரதிவாதி அழைத்து வரவில்லை என்றும், கடனுறுதிச் சீட்டை லோகநாதனை வைத்து உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

11. எனது விருப்பத்திற்கு தொகையை நிரப்பி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்

என்றும், தாவா தள்ளுபடியாக வேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல. ரூ.4,20,000/- என எழுதப்பட்ட கடனறுதிச் சீட்டில் மணிமேகலை கையொப்பம் செய்யவில்லை என்றும், ரூ.20,000/- என எழுதப்பட்ட கடனுறுதிச் சீட்டில்தான் மணிமேகலை கையொப்பம் செய்துள்ளார் என்றும் சொன்னால் சரியல்ல.

K. BHARATHI

Digitally signed by K. BHARATHI
Date: 2025.06.30 17:36:17 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.